# நீதிமொழிகள் புத்தகம்

நீதிமொழிகள், பழைய ஏற்பாட்டுப் புத்தகத்திலுள்ள முக்கியமான செயற்பாட்டுப் புத்தகமாகும். ஏனெனில் இது ஞானத்தையும், ஒழுக்கத்தையும் போதிக்கின்றது. பலதரப்பட்ட தேவைகள் உள்ள வாழ்க்கையில் திறன்மிக்க ஜீவியத்திற்கான ஒரு புத்தகமாகும். இது மிகச்சுருக்கமாக, அனுபவத்திலிருந்தும் கதைகளிலிருந்தும் கூறுகின்றது, சாலொமோனும் மற்றும் சில பங்காளிகளும் இணைந்து 900 நீதி மொழிகளைத் தந்துள்ளார்கள். இது ஞானத்தைப்பற்றியும், அறிவீனம் பற்றியும், பெருமை பற்றியும், தாழ்மைபற்றியும், நீதிபற்றியும், வஞ்சகம்பற்றியும், சோம்பேறித்தனம்பற்றியும், உழைப்பைப்பற்றியும், வறுமைபற்றியும், செல்வம்பற்றியும், நண்பர்கள்பற்றியும், அயலவர்கள் பற்றியும், அன்புபற்றியும், இச்சைபற்றியும், கோபம்பற்றியும், முரண்பாடுபற்றியும், எஜமான்பற்றியும், வேலைக்காரன்பற்றியும், ஜீவன்பற்றியும், மரணம்பற்றியும் பேசுகின்றது. இந்த அனுபவ உண்மைகளானது கொள்கை சம்பந்தமானதல்ல, ஆனால் செயற்பாட்டிற்கானதாகும். இவைகள் மனனம் செய்வதற்கு இலகுவானவை, ஆனால் இது ஒவ்வொருவரது வாழ்விலும் தொடர்புள்ளவைகளாக இருக்கின்றன. ஒரு நீதிமொழியை சில விநாடிகளில் வாசித்துவிடலாம், ஆனால் ஒரு நீதிமொழியைச் செயற்படுத்துவதற்கு வாழ்நாள்முழுவதும் தேவைப்படும்.

| சுருக்கம் | | |
|---|---|---|
| I. | ஞானம் | நீதி. 1–9 |
| II. | சாலொமோனின் நீதிமொழிகள் | நீதி. 10–22:16 |
| III. | இணைக்கப்பட்ட முதுமொழிகள் | நீதி. 22:17–24:22 |
| IV. | இன்னும் அதிகமானவை | நீதி. 24:23-34 |
| V. | சாலொமோனின் நீதிமொழிகள். | நீதி. 25–29 |
| VI. | ஆகுரின் முதுமொழகள். | நீதி. 30 |
| VII. | லேமுவேலின் முது மொழிகள். | நீதி. 31 |

**அறிமுகம். :**

1. நீண்டகாலத்தின் அனுபவத்தின் பயனாக சிறிய வசனங்களாக அமைக்கப்பட்ட புத்தகமே நீதிமொழிகள் புத்தகமாகும்.

2. நீதிமொழிகள் புத்தகம் பல எழுத்தாளர்களால் எழுதப்பட்டுள்ளது.

a. சாலொமோன் (1-24). 1 ராஜாக்கள் 4 :32 இல் சாலமோன் மூவாயிரம் நீதி மொழிகளையும், ஆயிரம் பாடல்களையும் எழிதியுள்ளார் என்று வாசித்துள்ளோம். ஆனால் அதிகாரம் 1-24 இல் சில நீதிமொழிகளையே காணமுடியும்.

b. எசேக்கியாவின் மனிதர்கள். (25-29)

c. ஆகூர்(Agur) (30)

d. லேமுவேல்(Lemuel (31)

3. இந்தப்புத்தகம் கதைகள் கூறுகின்றது. இது ஒரு இளம் மனிதன் தன்னுடைய வாழ்க்கையைத் தொடங்குவதைக் காண்பிக்கின்றது. அவரது முதலாவது படிப்பினை 1:7 கூறுகின்றது. இரண்டு பாடசாலைகள் தங்கள் இலக்கியத்தைக் கூறுகின்றது. ஒரு பாடசாலையின் பெயர் ஞானம், அடுத்த பாடசாலையின் பெயர் பேதை என்பதாகும்.

4. நீதிமொழிப்புத்தகத்தின் திறவுகோல் வசனம் ஞானம் என்பதாகும்.

a. ஞானம் தன்னுடைய பிள்ளைகளைப் பாதுகாக்கும். (2:8).

b. ஞானம் தன்னுடைய பிள்ளைகளை வழிநடத்தும் (3:5, 6).

c. ஞானம் தன்னுடைய பிள்ளைகளைப் பூரணப்படுத்தும். (4:18).

5. இந்தப்புத்தகத்தில் மிகவும் சிறப்பான விடயங்கள் அடங்கியுள்ளன.

a. ஞானம் எச்சரிக்கின்றது. (1:20-31)

b. ஞானம் பரிசில்களைத் தரும். (3:5, 6)

c. ஞானம் சக்கியைத் தரும். (6:6-11)

d. வேசி கர்த்தர் இல்லாதவள். (7:1-27)

e. கர்த்தருக்குப் பயந்த மனைவி. (31:10-31)

f. வல்லமையான இரட்சகர்(8:22-31)

g. பதினைத்து புகழ்வாய்ந்த விடயங்கள் (30:18-31)

h. கலகம் விழைவிக்க கூடிய புரட்சியாளர்கள்.(30:11-14

6. பழைய ஏற்பாட்டு நீதிமொழிகள் யாக்கோபின் நிருபங்களுக்குச் சமமானவை. இந்தப்புத்தகத்திற்கு கால அட்டவணை கொடுப்பது மிகவும் கஸ்டமானது. பதினொரு விடயங்கள் இதில் கலந்துரையாடப்பட்டுள்ளன

a. நற்பெயர்.:

(1) நீதிமானுடைய பேர் புகழ்பெற்று விளங்கும்; துன்மார்க்கனுடைய பேரோ அழிந்துபோகும். (10:7).

(2) திரளான ஐசுவரியத்தைப் பார்க்கிலும் நற்கீர்த்தியே தெரிந்து கொள்ளப்படத்தக்கது; பொன் வெள்ளியைப் பார்க்கிலும் தயையே நலம். (22:1).

b. இளமையும் ஒழுக்கமும்:

(1) ஞானமுள்ள மகன் தகப்பனைச் சந்தோஷப்படுத்துகிறான்;
மூடத்தனமுள்ளவனோ தாய்க்குச் சஞ்சலமாயிருக்கிறான். (10:1; 17:21, 25; 19:13).

(2) ஞானமுள்ள மகன் தகப்பனுடைய போதகத்தைக் கேட்கிறான்;
பரியாசக்காரனோ கடிந்துகொள்ளுதலுக்குச் செவிகொடான். (13:1).

(3) பிரம்பைக் கையாடாதவன் தன் மகனைப் பகைக்கிறான்; அவன்மேல் அன்பாயிருக்கிறவனோ அவனை ஏற்கனவே தண்டிக்கிறான். (13:24).

(4) நம்பிக்கையிருக்குமட்டும் உன் மகனைச் சிட்சைசெய்; ஆனாலும் அவனைக் கொல்ல உன் ஆத்துமாவை எழும்பவொட்டாதே. (19:18).

(5) பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான். (22:6).

(6) பிள்ளையின் நெஞ்சில் மதியீனம் ஒட்டியிருக்கும்; அதைத் தண்டனையின் பிரம்பு அவனை விட்டு அகற்றும். (22:15; 29:15, 17).

(7) “பிள்ளையை தண்டியாமல் விடாதே; அவனைப் பிரம்பினால் அடித்தால் அவன் சாகான். நீ பிரம்பினால் அவனை அடிக்கிறதினால் பாதாளத்துக்கு அவன் ஆத்துமாவைத் தப்புவிப்பாயே.” (23:13, 14).

(8) **வாசிக்கவும். 23:15-25.**

என் மகனே, உன் இருதயம் ஞானமுள்ளதாயிருந்தால், என்னிலே என் இருதயம் மகிழும். உன் உதடுகள் செம்மையானவைகளைப் பேசினால், என் உள்ளிந்திரியங்கள் மகிழும். உன் மனதைப் பாவிகள்மேல் பொறாமை கொள்ள விடாதே; நீ நாடோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிரு. நிச்சயமாகவே முடிவு உண்டு; உன் நம்பிக்கை வீண்போகாது. என் மகனே, நீ செவிகொடுத்து ஞானமடைந்து, உன் இருதயத்தை நல்வழியிலே நடத்து. மதுபானப்பிரியரையும் மாம்சப் பெருந்தீனிக்காரரையும் சேராதே. குடியனும் போஜனப்பிரியனும் தரித்திரராவார்கள்; தூக்கம் கந்தைகளை உடுத்துவிக்கும். உன்னைப் பெற்ற தகப்பனுக்குச் செவிகொடு; உன் தாய் வயது சென்றவளாகும்போது அவளை அசட்டைபண்ணாதே. சத்தியத்தை வாங்கு, அதை விற்காதே; அப்படியே ஞானத்தையும் உபதேசத்தையும் புத்தியையும் வாங்கு. நீதிமானுடைய தகப்பன் மிகவும் களிகூருவான்; ஞானமுள்ள பிள்ளையைப் பெற்றவன் அவனால் மகிழுவான். உன் தகப்பனும் உன் தாயும் சந்தோஷப்படுவார்கள்; உன்னைப் பெற்றவள் மகிழுவாள். சத்தியத்தை வாங்கு அதை விற்காதே வியாபார நோக்கில் சுய ஆதாயத்துக்காக ஊழியம் செய்தலாகாது.

(9) **வாசிக்கவும் 30:11-14.**

தங்கள் தகப்பனைச் சபித்தும், தங்கள் தாயை ஆசீர்வதியாமலும் இருக்கிற சந்ததியாருமுண்டு. தாங்கள் அழுக்கறக் கழுவப்படாமலிருந்தும், தங்கள் பார்வைக்குச் சுத்தமாகத் தோன்றுகிற சந்ததியாருமுண்டு. வேறொரு சந்ததியாருமுண்டு ; அவர்கள் கண்கள் எத்தனை மேட்டிமையும் அவர்கள் இமைகள் எத்தனை நெறிப்புமானவைகள். தேசத்தில் சிறுமையானவர்களையும் மனுஷரில் எளிமையானவர்களையும் பட்சிப்பதற்குக் கடகங்களையொத்த பற்களையும் கத்திகளையொத்த கடைவாய்ப்பற்களையுமுடைய சந்ததியாருமுண்டு.

c. வியாபார விடயங்கள்:

(1) கள்ளத்தராசு கர்த்தருக்கு அருவருப்பானது; சுமுத்திரையான நிறைகல்லோ அவருக்குப் பிரியம். (11:1; 16:11; 20:10, 23). நியாயமான வழியில் யாருக்கும் பாதிப்பு வராமல் வியாபாரம் செய்யவேண்டும். நிறுப்பதில், அளப்பதில் வேலைக்குதகுந்த பணத்தை கேட்பதில் நேர்மையாய் இருக்க வேண்டும்.

(2) என் மகனே, நீ உன் சிநேகிதனுக்காகப் பிணைப்பட்டு, அந்நியனுக்குக் கையடித்துக் கொடுத்தாயானால், நீ உன் வாய் மொழிகளால் சிக்குண்டாய், உன் வாயின் வார்த்தைகளால் பிடிபட்டாய். இப்பொழுது என் மகனே, உன் சிநேகிதனுடைய கையில் நீ அகப்பட்டுக் கொண்டபடியால், நீ உன்னைத் தப்புவித்துக்கொள்ள ஒன்று செய். உன் கண்ணுக்கு நித்திரையும், உன் கண் ணிமைக்குத் தூக்கமும் வரவிடாமல், உன் சிநேகிதனிடத்தில் போய், உன்னைத் தாழ்த்தி, அவனை வருந்திக் கேட்டுக்கொள். வெளிமான் வேட் டைக்காரன் கைக்கும், குருவி வேடன் கைக்கும் தப்புவதுபோல, நீ உன்னைத் தப்புவித்துக்கொள். (6:1-5; 11:15; 17:18).

(3) நன்மைசெய்யும்படி உனக்குத் திராணியிருக்கும்போது, அதைச் செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே. (3:27).

(4) கர்த்தர் நீதிமான்களைப் பசியினால் வருந்தவிடார்; துன்மார்க்கருடைய பொருளையோ அகற்றிவிடுகிறார். கர்த்தர் நீதிமான்களைப் பசியினால் வருந்தவிடார்; துன்மார்க்கருடைய பொருளையோ அகற்றிவிடுகிறார். (10:3).

(5) சோம்பற்கையால் வேலைசெய்கிறவன் ஏழையாவான்; சுறுசுறுப்புள்ளவன் கையோ செல்வத்தை உண்டாக்கும். (10:4; 22:29).

(6) தானியத்தைக் கட்டிவைக்கிறவனை ஜனங்கள் சபிப்பார்கள்; விற்கிறவனுடைய தலையின்மேல் ஆசீர்வாதம் தங்கும். (11:26).

(7) தன் ஐசுவரியத்தை நம்புகிறவன் விழுவான்; நீதிமான்களோ துளிரைப்போலே தழைப்பார்கள் (11:28).

(8) துன்மார்க்கன், நீதியின் வழியைப் புரட்ட, மடியிலுள்ள பரிதானத்தை வாங்குகிறான். (17:23).

(9) வெளியில் உன் வேலையை எத்தனப்படுத்தி, வயலில் அதை ஒழுங்காக்கி, பின்பு உன் வீட்டைக் கட்டு. (24:27).

(10) உன் ஆடுகளின் நிலைமையை நன்றாய் அறிந்துகொள்; உன் மந்தைகளின்மேல் கவனமாயிரு. செல்வம் என்றைக்கும் நிலையாது; கிரீடம் தலைமுறை தலைமுறைதோறும் நிலைநிற்குமோ? புல் முளைக்கும், பச்சிலைகள் தோன்றும், மலைப்பூண்டுகள் சேர்க்கப்படும்.
ஆட்டுக்குட்டிகள் உனக்கு வஸ்திரத்தையும், கடாக்கள் வயல் வாங்கத்தக்க கிரயத்தையும் கொடுக்கும். வெள்ளாட்டுப்பால் உன் ஆகாரத்துக்கும், உன் வீட்டாரின் ஆகாரத்துக்கும், உன் வேலைக்காரிகளின் பிழைப்புக்கும் போதுமானபடியிருக்கும். (27:23-27).

d. **திருமணம் :**

(1) உன் கிணற்றிலுள்ள தண்ணீரையும், உன் துரவில் ஊறுகிற ஜலத்தையும் பானம்பண்ணு. (5:15). மனைவி கணவனுக்கும் கணவன் மனைவிக்கும் உண்மையாக வாழவேண்டும்.
(2) உன் ஊற்றுக்கண் ஆசீர்வதிக்கப்படுவதாக; உன் இளவயதின் மனைவியோடே மகிழ்ந்திரு. (5:18). பல மனைவியை கொண்ட சாலொமோன் ஒரு மனைவியை பற்றி பேசியிருக்கிறார்.
(3) மதிகேடாய் நடக்கிற அழகுள்ள ஸ்திரீ, பன்றியின் மூக்கிலுள்ள பொன் மூக்குத்திக்குச் சமானம். (11:22).

(4) தன் வீட்டைக் கலைக்கிறவன் காற்றைச் சுதந்தரிப்பான்; மூடன் ஞானமுள்ளவனுக்கு அடிமையாவான். (11:29).

(5) குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்குக் கிரீடமாயிருக்கிறாள்; இலச்சை உண்டுபண்ணுகிறவளோ அவனுக்கு எலும்புருக்கியாயிருக்கிறாள். (12:4).
(6) புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள்; புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கைகளினால் அதை இடித்துப்போடுகிறாள். (14:1; 19:13).

(7) மனைவியைக் கண்டடைகிறவன் நன்மையானதைக் கண்டடைகிறான்; கர்த்தரால் தயையும் பெற்றுக்கொள்ளுகிறான். (18:22). இவ்வசனம் திருமணம் செய்வது நன்மையான காரியம் எனக் கூறுகிறது.

(8) சண்டைக்காரியோடே ஒரு பெரிய வீட்டில் குடியிருப்பதைப்பார்க்கிலும், வீட்டின்மேல் ஒரு மூலையில் தங்கியிருப்பதே நலம். (21:9; 25:24).

(9) **சண்டைக்காரியும் கோபக்காரியுமான ஸ்திரீயுடன் குடியிருப்பதைப் பார்க்கிலும் வனாந்தரத்தில் குடியிருப்பது நலம்.** (21:19). சமாதானமாக வாழ வேண்டும்.

(10) **வெற்றியுள்ள மனைவியைக் கண்டடைகிறவன் யார்? குறிப்பு.: இதற்கான விபரமான பதில் நீதிமொழிகள் 31ம் அதிகாரத்தை வாசிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.**

e. **ஒழுக்கக் கேடு** :

(1) **கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தைக் வெறுத்து நடத்தலாகும்.** (2:17).

(2) **அவள் வீடு பாதாளத்துக்குப்போம் வழி; அது மரண அறைகளுக்குக் கொண்டுபோய்விடும்.** (2:15; 7:27; 9:18). பாலியல் பாவங்களை வெறுத்து ஒழுக்கமாக வாழவேண்டும். இயலாதவிடத்து ஜெபித்து தேவபலத்தில் எதிர்கொள்ளலாம். தகுதியானவர்களிடம் ஆலோசனை கேட்பதும் நல்லது.

(3) **அவள் செய்கையின் முடிவோ எட்டியைப்போலக் கசப்பும், இருபுறமுங் கருக்குள்ள பட்டயம்போல் கூர்மையுமாயிருக்கும்.** (5:4). வஞ்சகமான பேச்சுக்களுக்கு, மாய்மாலமான உறவுகளுக்கு சிற்றின்பங்களுக்கு தகாத இச்சைகளுக்கு இடம்கொடுத்து இறுதியில் அவமானம் பாலியல் நோய்கள் போன்றனவற்றுக்கு ஆளாகலாம். தேவ கோபாக்கினைக்கும் ஆளாவீர்கள்.

(4) **உன் மாம்சமும் உன் சரீரமும் உருவழியும்போது நீ துக்கிப்பாய்.** (5:11).

(5 **போதகத்தை நான் வெறுத்தேனே, கடிந்துகொள்ளுதலை என் மனம் அலட்சியம் பண்ணினதே!** (5:12, 13).

(6) **மனுஷனுடைய வழிகள் கர்த்தரின் கண்களுக்கு முன்பாக இருக்கிறது; அவனுடைய** வழிகளெல்லாவற்றையும் அவர் சீர்தூக்கிப்பார்க்கிறார். (5:21).

(7) **சோம்பேறியே, நீ எறும்பினிடத்தில் போய், அதின் வழிகளைப் பார்த்து, ஞானத்தைக் கற்றுக்கொள்.** (6:6).

8) தன் வஸ்திரம் வேகாமல் மடியிலே எவனாவது நெருப்பை வைத்துக்கொள்ளக்கூடுமோ? (6:27, 32).

(9) உடனே அவன் அவள் பின்னே சென்றான்; ஒரு மாடு அடிக்கப்படும்படி செல்வதுபோலும், ஒரு மூடன் விலங்கிடப்பட்டுத் தண்டனைக்குப் போவது போலும், (7:22, 23):

(a) எருது இறைச்சி வெட்டுகிறவனிடம் செல்லும்.

(b) மானானது மரணஅம்புக்கு காத்திருக்கும்.

(c) பறவை கண்ணியைநோக்கி பறந்து செல்லும்.

f. **துஷ்ட நண்பர்கள்.** :

(1)
என் மகனே, பாவிகள் உனக்கு நயங்காட்டினாலும் நீ சம்மதியாதே. எங்களோடே வா, இரத்தஞ்சிந்தும்படி நாம் பதிவிருந்து, குற்றமற்றிருக்கிறவர்களை முகாந்தர மின்றிப் பிடிக்கும்படி ஒளித்திருப்போம்; பாதாளம் விழுங்குவதுபோல் நாம் அவர்களை உயிரோடே விழுங்குவோம்; குழியில் இறங்குகிறவர்கள் விழுங்க ப்படுவதுபோல் அவர்களை முழுமையும் விழுங்குவோம்; விலையுயர்ந்த சகலவிதப் பொருள்களையும் கண்டடைவோம்; கொள்ளைப் பொருளினால் நம்முடைய வீடுகளை நிரப்புவோம். எங்களோடே பங்காளியாயிரு; நம்மெல்லா ருக்கும் ஒரே பை இருக்கும் என்று அவர்கள் சொல்வார்களாகில்; என் மகனே, நீ அவர்களோடே வழிநடவாமல், உன் காலை அவர்கள் பாதைக்கு விலக்குவாயாக. அவர்கள் கால்கள் தீங்குசெய்ய ஓடி, இரத்தஞ் சிந்தத் தீவிரிக்கிறது. எவ்வகை யான பட்சியானாலும் சரி, அதின் கண்களுக்கு முன்பாக வலையை விரிப்பது விருதா. இவர்களோ தங்கள் இரத்தத்திற்கே பதிவிருக்கிறார்கள், தங்கள் பிராணனுக்கே ஒளிவைத்திருக்கிறார்கள். பொருளாசையுள்ள எல்லாருடைய வழியும் இதுவே; இது தன்னையுடைய வர்களின் உயிரை வாங்கும். (1:10-19).

(2) அவர்கள் ஆகாமியத்தின் அப்பத்தைப் புசித்து, கொடுமையின் இரசத்தைக் குடிக்கிறார்கள். 4:17).

(3) வன்கண்ணனுடைய ஆகாரத்தைப் புசியாதே; அவனுடைய ருசியுள்ள பதார்த்தங்களை இச்சியாதே. அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்; புசியும், பானம்பண்ணும் என்று அவன்

உன்னோடே சொன்னாலும், அவன் இருதயம் உன்னோடே இராது. வன்கண்ணனுடைய ஆகாரத்தைப் புசியாதே; அவனுடைய ருசியுள்ள பதார்த்தங்களை இச்சியாதே. அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்; புசியும், பானம்பண்ணும் என்று அவன் உன்னோடே சொன்னாலும், அவன் இருதயம் உன்னோடே இராது. நீ புசித்த துணிக்கையை வாந்தி பண்ணி, உன் இனிய சொற்களை இழந்துபோவாய். (23:6-8).

(4) தண்ணீரில் முகத்துக்கு முகம் ஒத்திருக்குமாப்போல, மனுஷரில் இருதயத்திற்கு இருதயம் ஒத்திருக்கும். (27:19).

**g. ஞானம்**

(1) கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; (1:7; 9:10). ஞானம் என்பது கல்வியறிவு, பல காரியங்களை அறிந்திருத்தல் என்பதைக்காட்டிலும். நிதானமாக புத்திக்கூர்மையோடு சிந்தித்து செயலாற்றுவதை குறிக்கும்.
மூடன் என்பது அறியாமையை குறிப்பிடாமல். தான்செய்வது எல்லாம் சரி என பெருமையோடு தன்னிச்சையாக நடப்பதை குறிக்கிறது.

(2) அவைகள் உன் சிரசுக்கு அலங்காரமான முடியும், உன் கழுத்துக்குச் சரப்பணியுமாயிருக்கும். அவைகள் உன் சிரசுக்கு அலங்காரமான முடியும், உன் கழுத்துக்குச் சரப்பணியுமாயிருக்கும். (1:9).

(3) தன் இளவயதின் நாயகனை விட்டு, தன் தேவனுடைய உடன்படிக்கையை மறக்கச் செய்யும். (2:16). சரீர இச்சை தேவனுடைய உறவில் விரிசலை ஏற்படுத்தும்.

(4) உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார். (3:6).

(5) அது உன் நாபிக்கு ஆரோக்கியமும், உன் எலும்புகளுக்கு ஊனுமாகும். (3:8).

(6) உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு. அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும்; உன் ஆலைகளில் திராட்சரசம் புரண்டோடும். (3:9, 10).

(7) அதின் வர்த்தகம் வெள்ளி வர்த்தகத்திலும், அதின் ஆதாயம் பசும்பொன்னிலும் உத்தமமானது. (3:14; 8:11, 19).

(8) அதின் வலதுகையில் தீர்க்காயுசும், அதின் இடதுகையில் செல்வமும் கனமும் இருக்கிறது. (3:16, 17; 9:11).

(9) கர்த்தர் ஞானத்தினாலே பூமியை அஸ்திபாரப்படுத்தி, புத்தியினாலே வானங்களை ஸ்தாபித்தார். அவருடைய ஞானத்தினாலே ஆழங்கள் பிரிந்தது, ஆகாயமும் பனியைப் பெய்கிறது. (3:19, 20).

(10) ஞானமே முக்கியம், ஞானத்தைச் சம்பாதி; என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதித்துக்கொள். ஞானமே முக்கியம், ஞானத்தைச் சம்பாதி; என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதித்துக்கொள். (4:7).

(11) இச்சக வார்த்தைகளைப் பேசும் அந்நிய பெண்ணாகிய பரஸ்திரீக்கு உன்னை விலக்கிக் காப்பதற்காக, (7:4).

(12) என்னைக் கண்டடைகிறவன் ஜீவனைக் கண்டடைகிறான்; கர்த்தரிடத்தில் தயவையும் பெறுவான் (8:35).

h. **சுய கட்டுப்பாடு** :

(1) பலவானைப்பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன்; பட்டணத்தைப் பிடிக்கிறவனைப்பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன். (16:32).

(2) வழக்காடப் பதற்றமாய்ப் போகாதே; முடிவிலே உன் அயலான் உன்னை வெட்கப்படுத்தும்போது, நீ என்ன செய்யலாம் என்று திகைப்பாயே. (25:8).

(3) தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிடிந்த பாழான பட்டணம்போலிருக்கிறான். (25:28).

i. மதுபானம் :

(1) திராட்சரசம் பரியாசஞ்செய்யும், மதுபானம் அமளிபண்ணும்; அதினால் மயங்குகிற ஒருவனும் ஞானவானல்ல. (20:1). கலாத்தியர் 5:21 குடிவெறி கொள்பவர்கள் தேவனுடைய அரசை சுதந்தரிப்பதில்லை.

(2) ஐயோ! யாருக்கு வேதனை? யாருக்குத் துக்கம்? யாருக்குச் சண்டைகள்? யாருக்குப் புலம்பல்? (23:29).

(3) யாருக்குக் காரணமில்லாத காயங்கள்? யாருக்கு இரத்தங்கலங்கின கண்கள்? (23:29).

(4) முடிவிலே அது பாம்பைப்போல் கடிக்கும், விரியனைப்போல் தீண்டும். (23:32). சிறியளவில் குடிக்கிறோம் எனத் தொடங்கி குடிப்பழக்கத்துக்கு அடிமையாகி குயிலேயே மூழ்கிவிடுவார்கள்.

(5) உன் கண்கள் பரஸ்திரீகளை நோக்கும்; உன் உள்ளம் தாறுமாறானவைகளைப் பேசும். (23:33).

(6) உன் உள்ளம் தாறுமாறானவைகளைப் பேசும். (23:33).

(7) நீ நடுக்கடலிலே சயனித்திருக்கிறவனைப்போலும், பாய்மரத்தட்டிலே படுத்திருக்கிறவனைப்போலும் இருப்பாய். (23:34).

(8) என்னை அடித்தார்கள், எனக்கு நோகவில்லை; என்னை அறைந்தார்கள், எனக்குச் சுரணையில்லை; நான் அதைப் பின்னும் தொடர்ந்து தேட எப்பொழுது விழிப்பேன் என்பாய். (23:35).

(9) திராட்சரசம் குடிப்பது ராஜாக்களுக்குத் தகுதியல்ல; லேமுவேலே, அது ராஜாக்களுக்குத் தகுதியல்ல; மதுபானம் பிரபுக்களுக்குத் தகுதியல்ல. (31:5).

j. :நட்பு

(1) சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான்; இடுக்கணில் உதவவே சகோதரன் பிறந்திருக்கிறான். (17:17).

(2) சிநேகிதன் அடிக்கும் அடிகள் உண்மையானவைகள்; சத்துரு இடும் முத்தங்களோ வஞ்சனையுள்ளவைகள். (27:6).

(3) உன் சிநேகிதனையும், உன் தகப்பனுடைய சிநேகிதனையும் விட்டுவிடாதே; உன் ஆபத்துக்காலத்தில் உன் சகோதரனுடைய வீட்டிற்குப் போகாதே; தூரத்திலுள்ள சகோதரனிலும் சமீபத்திலுள்ள அயலானே வாசி. (27:10).

(4) பரிமளதைலமும் சுகந்ததூபமும் இருதயத்தைக் களிப்பாக்குவதுபோல, ஒருவனுடைய சிநேகிதன் உட்கருத்தான ஆலோசனையினால் பாராட்டும் இன்பமானது களிப்பாக்கும். (27:9).

(5) A இரும்பை இரும்பு கருக்கிடும்; அப்படியே மனுஷனும் தன் சிநேகிதனுடைய முகத்தைக் கருக்கிடுகிறான். (27:17).

(6) சிநேகிதருள்ளவன் சிநேகம் பாராட்டவேண்டும்; (18:24).

(7) சகோதரனிலும் அதிக சொந்தமாய்ச் சிநேகிப்பவனுமுண்டு (18:24).

k. நாவும் அதன் வார்த்தைகளும் :

(1) நீதிமானுடைய நாவு சுத்தவெள்ளி; துன்மார்க்கனுடைய மனம் அற்பவிலையும் பெறாது. (10:20).

(2) நீதிமானுடைய நாவு சுத்தவெள்ளி; துன்மார்க்கனுடைய மனம் அற்பவிலையும் பெறாது. (10:19; 11:12).

(3) நீதிமானுடைய உதடுகள் அநேகரைப் போஷிக்கும்; மூடரோ மதியீனத்தினால் மாளுவார்கள். (10:21).

(4) மாயக்காரன் தனக்கு அடுத்தவனை வாயினால் கெடுக்கிறான்; நீதிமானோ அறிவினால் தப்புகிறான். மாயக்காரன் தனக்கு அடுத்தவனை வாயினால் கெடுக்கிறான்; நீதிமானோ அறிவினால் தப்புகிறான். (11:9).

(5) செம்மையானவர்களுடைய உத்தமம் அவர்களை நடத்தும்; துரோகிகளின் மாறுபாடோ அவர்களைப் பாழாக்கும். (11:13).

(6) பட்டயக்குத்துகள்போல் பேசுகிறவர்களும் உண்டு; ஞானமுள்ளவர்களுடைய நாவோ ஔஷதம். (12:18).

(7) தன் வாயைக் காக்கிறவன் தன் பிராணனைக் காக்கிறான்; தன் உதடுகளை விரிவாய்த் திறக்கிறவனோ கலக்கமடைவான். (13:3).

(8) மெய்ச்சாட்சி சொல்லுகிறவன் உயிர்களை இரட்சிக்கிறான்; வஞ்சனைக்காரனோ பொய்களை ஊதுகிறான். (14:25).

(9) மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும். (15:1).

(10) ஆரோக்கியமுள்ள நாவு ஜீவவிருட்சம்; நாவின் மாறுபாடோ ஆவியை நொறுக்கும். ஆரோக்கியமுள்ள நாவு ஜீவவிருட்சம்; நாவின் மாறுபாடோ ஆவியை நொறுக்கும். (15:4).

(11) மனுஷனுக்குத் தன் வாய்மொழியினால் மகிழ்ச்சியுண்டாகும்; ஏற்றகாலத்தில் சொன்ன வார்த்தை எவ்வளவு நல்லது! (15:23).

(12) நீதிமானுடைய மனம் பிரதியுத்தரம் சொல்ல யோசிக்கும்; துன்மார்க்கனுடைய வாயோ தீமைகளைக் கொப்பளிக்கும். (15:28).

(13) இனிய சொற்கள் தேன்கூடுபோல் ஆத்துமாவுக்கு மதுரமும், எலும்புகளுக்கு ஔஷதமுமாகும். (16:24).

(14) மாறுபாடுள்ளவன் சண்டையைக் கிளப்பிவிடுகிறான்; கோள் சொல்லுகிறவன் பிராண சிநேகிதரையும் பிரித்துவிடுகிறான். (16:28; 17:9).

(15) சண்டையின் ஆரம்பம் மதகைத் திறந்துவிடுகிறதுபோலிருக்கும்; ஆதலால் விவாதம் எழும்புமுன் அதை விட்டுவிடு. 17:14)

(16) அறிவாளி தன் வார்த்தைகளை அடக்குகிறான்; விவேகி குளிர்ந்த மனமுள்ளவன். (17:27).

(17) The words of a talebearer are wounds கோள்காரனுடைய வார்த்தைகள் விளையாட்டுப்போலிருக்கும், ஆனாலும் அவைகள் உள்ளத்திற்குள் தைக்கும். (18:8).

(18) காரியத்தைக் கேட்குமுன் உத்தரம் சொல்லுகிறவனுக்கு, அது புத்தியீனமும் வெட்கமுமாயிருக்கும். (18:13).

(19) மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்; அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள். (18:21).

(20) பொய்ச்சாட்சிக்காரன் ஆக்கினைக்குத் தப்பான்; பொய்களைப் பேசுகிறவனும் தப்புவதில்லை. (19:5).

(21) ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம். (25:11).

(22) நீண்ட பொறுமையினால் பிரபுவையும் சம்மதிக்கப்பண்ணலாம்; இனிய நாவு எலும்பையும் நொறுக்கும். (25:15).

(23) வழியே போகையில் தனக்கடாத வழக்கில் தலையிடுகிறவன் நாயைக் காதைப் பிடித்திழுக்கிறவனைப் போலிருக்கிறான். (26:17

(24) விறகில்லாமல் நெருப்பு அவியும்; கோள்சொல்லுகிறவனில்லாமல் சண்டை அடங்கும். (26:20).

(25) உன் வாய் அல்ல, புறத்தியானே உன்னைப் புகழட்டும்; உன் உதடு அல்ல, அந்நியனே உன்னைப் புகழட்டும். (27:2).

## I. **பலவகையான குழுக்கள்.** :

(1) கர்த்தர் வெறுக்கும் ஏழு விடயங்கள்.
ஆறு காரியங்களைக் கர்த்தர் வெறுக்கிறார், ஏழும் அவருக்கு அருவருப்பான வைகள். அவையாவன: மேட்டிமையான கண், பொய்நாவு, குற்றமற்றவர் களுடைய இரத்தம் சிந்துங் கை, துராலோசனையைப் பிணைக்கும் இருதயம், தீங்கு செய்வதற்கு விரைந்தோடுங் கால், அபத்தம் பேசும் பொய்ச்சாட்சி, சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டு பண் ணுதல் ஆகிய இவைகளே. (6:16-19):

(a) பெருமையான பார்வை

(b) பொய் சொல்லும் நாவு

(c) இரத்தம் சிந்துங்கைகள்.

(d) துராலோசனையைப் பிணைக்கும் இருதயம்,

(e) தீங்கு செய்வதற்கு விரைந்தோடுங் கால்

(f) அபத்தம் பேசும் பொய்ச்சாட்சி,

(g) சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டு பண்ணுதல்

(2) **திருப்பியடையாத நான்கு விடயங்கள் உண்டு**. (30:15, 16): தா, தா, என்கிற இரண்டு குமாரத்திகள் அட்டைக்கு உண்டு. திருப்தியடையாத மூன்றுண்டு, போதும் என்று சொல்லாத நான்குமுண்டு. அவையாவன: பாதாளமும், மலட்டுக் கர்ப்பமும், தண்ணீரால் திருப்தியடையாத நிலமும், போதுமென்று சொல்லாத அக்கினியுமே.

(a) பாதாளமும்,

(b) மலட்டுக் கர்ப்பமும்

(c) தண்ணீரால் திருப்தியடையாத நிலமும்,

(d) அக்கினியுமே.

(3) ஆச்சரியமானவைகள் புத்திக்கெட்டாதவைகள் (30:18, 19):

(a) ஆகாயத்தில் கழுகினுடைய வழியும்,

(b) கன்மலையின்மேல் பாம்பினுடைய வழியும்

(c) நடுக்கடலில் கப்பலினுடைய வழியும்

(d) ஒரு கன்னிகையை நாடிய மனுஷனுடைய வழியுமே.

(4) மூன்றினிமித்தம் பூமி சஞ்சலப்படுகிறது, நான்கையும் அது தாங்கமாட்டாது. 30:21-25): அரசாளுகிற அடிமையினிமித்தமும், போஜனத்தால் திருப்தியான மூடனினிமித்தமும், பகைக்கப்படத்தக்கவளாயிருந்தும், புருஷனுக்கு வாழ்க்கைப்பட்ட ஸ்திரீயினிமித்தமும், தன் நாச்சியாருக்குப் பதிலாக இல்லாளாகும் அடிமைப் பெண்ணினிமித்தமுமே. பூமியில் சிறிய வைகளாயிருந்தும், மகா ஞானமுள்ளவைகள் நான்குண்டு. அவையாவன: அற்பமான ஜெந்து வாயிருந்தும், கோடைகாலத்திலே தங்கள் ஆகாரத்தைச் சம்பாதிக்கிற எறும்பும்,

(a) அரசாளுகிற அடிமையினிமித்தமும்

(b) போஜனத்தால் திருப்தியான மூடனினிமித்தமும்,

(c) பகைக்கப்படத்தக்கவளாயிருந்தும், புருஷனுக்கு வாழ்க்கைப்பட்ட ஸ்திரீயினிமித்தமும்,

(d) தன் நாச்சியாருக்குப் பதிலாக இல்லாளாகும் அடிமைப் பெண்ணினிமித்தமுமே.

(5) பூமியில் சிறியவைகளாயிருந்தும், மகா ஞானமுள்ளவைகள் நான்குண்டு. (30:24-28):

அவையாவன: அற்பமான ஜெந்துவாயிருந்தும், கோடைகாலத்திலே தங்கள் ஆகாரத்தைச் சம்பாதிக்கிற எறும்பும், சத்துவமற்ற ஜெந்துவாயிருந்தும், தங்கள் வீட்டைக் கன்மலையிலே தோண்டிவைக்கும் குழிமுசல்களும், ராஜா இல்லாதிருந்தும், பவுஞ்சு பவுஞ்சாய்ப் புறப்படுகிற வெட்டுக்கிளிகளும், தன் கைகளினால் வலையைப் பின்னி, அரசர் அரண்மனைகளிலிருக்கிற சிலந்திப் பூச்சியுமே.

(a) எறும்பும் (இவை பலமானவைகள் அல்ல, ஆனாலும் மாரிகாலத்திற்கான உணவை கோடைகாலத்தில் சேர்த்து வைக்கின்றன.)

(b) குழிமுசல்களும், (இவை மென்மையான மிருகமாயிருந்தும், பாறைகள் மத்தியில் பிடியிருந்து தங்களைக் காத்துக் கொள்கின்றன.)

(c) வெட்டுக்கிளிகளும் (அவைகளுக்கு தலைவன் இல்லாதிருந்தும் அவைகள் ஒழுங்காக பறந்து செல்கின்றன.)

(d) சிலந்தி (இவைகள் இலகுவில் படிக்கப்பட்டு கொல்லப்படக்கூடியவை, ஆனாலும் ராஜாவின் அரண்மனையிலும் கூடுகட்டி வாழும்.)

(6) (30:29-31) விநோதமாய் அடிவைத்து நடக்கிறவைகள் மூன்றுண்டு; விநோத நடையுள்ளவைகள் நாலுமுண்டு.: அவையாவன: மிருகங்களில் சவுரியமானதும் ஒன்றுக்கும் பின்னிடையாததுமாகிய சிங்கமும், போர்க்குதிரையும், வெள்ளாட்டுக் கடாவும், ஒருவரும் எதிர்க்கக்கூடாத ராஜாவுமே.

(a) மிருகங்களின் அரசனாகிய சிங்கம்.

(b) போர்க்குதிரையும்

(c) வெள்ளாட்டுக் கடாவும்

(d) ஒருவரும் எதிர்க்கக்கூடாத ராஜாவுமே.

(7) **இரண்டு மனு உம்மிடத்தில் கேட்கிறேன்** (30:7-9)
நான் மரிக்கும்பரியந்தமும் அவைகளை எனக்கு மறுக்காமல் தாரும். மாயை யையும் பொய் வசனிப்பையும் எனக்குத் தூரப்படுத்தும்; தரித்திரத்தையும் ஐசுவரியத்தையும் எனக்குக் கொடாதிருப்பீராக. நான் பரிபூரணம் அடைகிற தினால் மறுதலித்து, கர்த்தர் யார் என்று சொல்லாதபடிக்கும்; தரித்திரப்படு கிறதினால் திருடி, என் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதபடிக்கும், என் படியை எனக்கு அளந்து என்னைப் போஷித்தருளும்.

(a) மாயையையும் பொய் வசனிப்பையும் எனக்குத் தூரப்படுத்தும்;

(b) தரித்திரத்தையும் ஐசுவரியத்தையும் எனக்குக் கொடாதிருப்பீராக. – நான் பரிபூரணம் அடைகிறதினால் மறுதலித்து, கர்த்தர் யார் என்று சொல்லாதபடிக்கும்; தரித்திரப்படுகிறதினால் திருடி, என் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதபடிக்கும், என் படியை எனக்கு அளந்து என்னைப் போஷித்தருளும்.
feed me with food convenient for me: Lest I be full, and deny thee and say, who is the Lord? Lest I be poor, and steal, and take the name of my God in vain.

| நீதி மொழிகள். | |
|---|---|
| **பதினொரு கட்டுரைப்பொருள்** | |
| நற் பெயர். | 10:7; 22:1 |
| இளமையும் ஒழுக்கமும் | 13:24; 19:18; 22:6,15; 23:13,14 |
| வியாபாரவிடயங்கள் | 11:1; 6:6-11; 10:4, 26 |
| திருமணம் | 5:15,18; 11:22, 29; 12:4; 14:1; 19:13; 21:9,19; 31:10 |
| துர்நடத்தை | 5:3-5; 6:24-32 |
| துஷ்டநண்பர்கள் | 1:10-19; 4:17; 23:6-8; 27:19 |

| | |
|---|---|
| ஞானம் | 3:13-18; 8:35 |
| சுய கட்டுப்பாடு | 16:32; 25:28 |
| மதுபானம் | 20:1; 23:29-32 |
| நட்பு | 17:17; 18:24; 26:6 |
| நாவும் வார்த்தைகளும் | 15:1, 23, 28; 16:24; 17:27; 18:21; 25:11; 26:17, 20; 2 |

**இலக்கிய நயம்வாய்ந்த பகுதிகள்.**

ஏற்றகாலத்தில் சொன்ன வார்த்தை எவ்வளவு நல்லது!
(15:23).

| அதிகாரம் | வார்த்தைகள். |
|---|---|
| 1 | 24-28 |
| 3 | 5, 6, 9, 10-12, 19-26 |
| 6 | 16-19 |
| 8 | 22-31 |
| 11 | 30 |
| 14 | 12, 34 |
| 16 | 3, 7, 18 |
| 18 | 10 |
| 24 | 16, 17, 28, 29 |
| 25 | 19-22 |
| 27 | 1 |
| 28 | 13 |
| 29 | 1, 18 |
| 30 | 4-9, 11-14 |
| 31 | 10-12, 28, 30 |

இவை யாவற்றிற்கும் மேலாக அதிக எண்ணிக்கையில் இலக்கிய நயம்வாய்ந்த பகுதிகள் இருக்கின்றன. அவற்றில் முக்கியமானவைகள். “ நான் கூப்பிட்டும், நீங்கள் கேட்கமாட்டோம் என்கிறீர்கள்; நான் என் கையை நீட்டியும்

கவனிக்கிறவன் ஒருவனும் இல்லை. என் ஆலோசனையையெல்லாம் நீங்கள் தள்ளி, என் கடிந்துகொள்ளுதலை வெறுத்தீர்கள். ஆகையால், நானும் உங்கள் ஆபத்துக்காலத்தில் நகைத்து, நீங்கள் பயப்படுங்காரியம் வரும்போது ஆகடியம்பண்ணுவேன். நீங்கள் பயப்படுங்காரியம் புசல்போல் வரும்போதும், ஆபத்து சூறாவளிபோல் உங்களுக்கு நேரிடும்போதும், நெருக்கமும் இடுக்கணும் உங்கள்மேல் வரும்போதும், ஆகடியம்பண்ணுவேன். அப்பொழுது அவர்கள் என்னை நோக்கிக் கூப்பிடுவார்கள்; நான் மறுஉத்தரவு கொடுக்கமாட்டேன்; அவர்கள் அதிகாலையிலே என்னைத் தேடுவார்கள், என்னைக் காணமாட்டார்கள். (1:24-28).

நீதி. 3:5-6 உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்.

நீதி. 3: 9-12 உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு. அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும்; உன் ஆலைகளில் திராட்சரசம் புரண்டோடும். என் மகனே, நீ கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவர் கடிந்து கொள்ளும் போது சோர்ந்துபோகாதே. தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனைச் சிட்சிக் கிறதுபோல, கர்த்தரும் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனைச் சிட்சிக்கிறார்.

நீதி. 3: 19-26 கர்த்தர் ஞானத்தினாலே பூமியை அஸ்திபாரப்படுத்தி, புத்தியினாலே வானங்களை ஸ்தாபித்தார். அவருடைய ஞானத்தினாலே ஆழங்கள் பிரிந்தது, ஆகாயமும் பனியைப் பெய்கிறது. என் மகனே, இவைகள் உன் கண்களை விட்டுப் பிரியாதிருப்பதாக; மெய்ஞ் ஞானத்தையும் நல்லாலோசனையையும் காத்துக்கொள். அவைகள் உன் ஆத்துமாவுக்கு ஜீவனும், உன் கழுத்துக்கு அலங்காரமுமாயிருக்கும். அப்பொழுது நீ பயமின்றி உன் வழியில் நடப்பாய், உன் கால் இடறாது. நீ படுக்கும்போது பயப்படாதிருப்பாய்; நீ படுத்துக் கொள்ளும் போது உன் நித்திரை இன்பமாயிருக்கும். சடிதியான திகிலும், துஷ்டர்களின் பாழ்க் கடிப்பும் வரும்போது நீ அஞ்சவேண்டாம். கர்த்தர் உன் நம்பிக்கை யாயிருந்து, உன் கால் சிக்கிக் கொள்ளாதபடி காப்பார்.

நீதி.  6:  16-19. ஆறு காரியங்களைக் கர்த்தர் வெறுக்கிறார், ஏழும் அவருக்கு அருவருப்பானவைகள். அவையாவன:   மேட்டிமையான கண், பொய்நாவு, குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்துங் கை, துராலோசனையைப் பிணைக்கும் இருதயம், தீங்கு செய்வதற்கு விரைந்தோடுங் கால், அபத்தம்  பேசும் பொய்ச்சாட்சி, சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுதல் ஆகிய இவைகளே.

நீதி 8:22-31. கர்த்தர் தமது கிரியைகளுக்குமுன் பூர்வமுதல் என்னைத் தமது வழியின் ஆதியாகக் கொண்டிருந்தார். பூமி உண்டாகுமுன்னும், ஆதிமுதற்கொண்டும் அநாதியாய் நான் அபிஷேகம் பண்ணப்பட்டேன். ஆழங்களும், ஜலம் புரண்டுவரும் ஊற்றுகளும் உண்டாகுமுன்னே நான் ஜநிப்பிக்கப்பட்டேன். மலைகள் நிலைபெறுவதற்கு முன்னும், குன்றுகள் உண்டாவதற்கு முன்னும், அவர் பூமியையும் அதின் வெளிகளையும், பூமியிலுள்ள மண்ணின் திரள்களையும் உண்டாக்கு  முன்னும் நான் ஜநிப்பிக்கப்பட்டேன். அவர் வானங்களைப் படைக்கையில் நான் அங்கே இருந்தேன்; அவர் சமுத்திர விலாசத்தை வட்டணிக்கையிலும், உயரத்தில் மேகங்களை ஸ்தாபித்து, சமுத்திரத்தின் ஊற்றுகளை அடைத்துவைக்கையிலும், சமுத்திர ஜலம் தன் கரையை விட்டு மீறாதபடிக்கு அதற்கு எல்லையைக் கட்டளையிட்டு, பூமியின் அஸ்திபாரங்களை நிலைப்படுத்  துகையிலும், நான் அவர் அருகே செல்லப்பிள்ளையாயிருந்தேன்; நித்தம் அவருடைய மனமகிழ்ச்சியாயிருந்து, எப்பொழுதும்   அவர் சமுகத்தில் களிகூர்ந்தேன். அவருடைய பூவுலகத்தில் சந்தோஷப்பட்டு, மனுமக்களுடனே மகிழ்ந்து கொண்டிருந்தேன்.

நீதி 11:30. நீதிமானுடைய பலன் ஜீவவிருட்சம்; ஆத்துமாக்களை  ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறவன்   ஞானமுள்ளவன். ஆத்துமாக்களை ஆதாயம் செய்யாதவர்கள் ஞானமற்றவர்கள்.

நீதி 14:12, 34.மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள். நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவமோ எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி.

நீதி (16:3, 7, 18).உன் செய்கைகளைக் கர்த்தருக்கு ஒப்புவி; அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப்படும்.  ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால், அவனுடைய சத்துருக்களும் அவனோடே

சமாதானமாகும்படி செய்வார். அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை.

நீதி. 18:10 கர்த்தரின் நாமம் பலத்த துருகம்; நீதிமான் அதற்குள் ஓடிச் சுகமாயிருப்பான்.

நீதி. 24:16, 17, 28, 29). நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான்; துன்மார்க்கரோ தீங்கிலே இடறுண்டு கிடப்பார்கள். உன் சத்துரு விழும்போது சந்தோஷப்படாதே; அவன் இடறும்போது உன் இருதயம் களிகூராதிருப்பதாக. நியாயமின்றிப் பிறனுக்கு விரோதமாய்ச் சாட்சியாக ஏற்படாதே; உன் உதடுகளினால் வஞ்சகம் பேசாதே. அவன் எனக்குச் செய்தபிரகாரம் நானும் அவனுக்குச் செய்வேன், அவன் செய்த செய்கைக்குத்தக்கதாக நானும் அவனுக்குச் சரிக்கட்டுவேன் என்று நீ சொல்லாதே.

நீதி.25:19-22. ஆபத்துக்காலத்தில் துரோகியை நம்புவது உடைந்த பல்லுக்கும் மொழி புரண்ட காலுக்கும் சமானம். மனதுக்கமுள்ளவனுக்குப் பாட்டுகளைப் பாடுகிறவன், குளிர்காலத்தில் வஸ்திரத்தைக் களைகிறவனைப்போலவும், வெடியுப்பின்மேல் வார்த்த காடியைப்போலவும் இருப்பான். உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்குப் புசிக்க ஆகாரங்கொடு; அவன் தாகமாயிருந்தால், குடிக்கத் தண்ணீர் கொடு. அதினால் நீ அவன் தலையின்மேல் எரிகிற தழல்களைக் குவிப்பாய்; கர்த்தர் உனக்குப் பலனளிப்பார்.

நீதி. 27:1. நாளையத்தினத்தைக்குறித்துப் பெருமைபாராட்டாதே; ஒருநாள் பிறப்பிப்பதை அறியாயே.

நீதி. 28:13. தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்.

நீதி29:1, 15. அடிக்கடி கடிந்து கொள்ளப்பட்டும் தன் பிடரியைக் கடினப்படுத்துகிறவன் சகாயமின்றிச் சடிதியில் நாசமடைவான். பிரம்பும் கடிந்துகொள்ளுதலும் ஞானத்தைக் கொடுக்கும்; தன் இஷ்டத்திற்கு விடப்பட்ட பிள்ளையோ தன் தாய்க்கு வெட்கத்தை உண்டுபண்ணுகிறான்.

நீதி 30:4-9, 11-14.

வானத்துக்கு ஏறியிறங்கினவர் யார்? காற்றைத் தமது கைப்பிடிகளில் அடக்கி னவர் யார்? தண்ணீர்களை வஸ்திரத்திலே கட்டினவர் யார்? பூமியின் எல்லை களையெல்லாம் ஸ்தாபித்தவர் யார்? அவருடைய நாமம் என்ன? அவர் குமார னுடைய நாமம் என்ன? அதை அறிவாயோ? தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள்; தம்மை அண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு அவர் கேடக மானவர். அவருடைய வசனங்களோடு ஒன்றையும் கூட்டாதே, கூட்டினால் அவர் உன்னைக் கடிந்துகொள்வார், நீ பொய்யனாவாய். இரண்டு மனு உம்மிடத்தில் கேட்கிறேன்; நான் மரிக்கும்பரியந்தமும் அவைகளை எனக்கு மறுக்காமல் தாரும் . மாயையையும் பொய்வசனிப் பையும் எனக்குத் தூரப்படுத்தும்; ஐசுவரியத்தையும் எனக்குக் கொடாதிருப்பீராக. நான் பரிபூரணம் அடைகிறதினால் மறுதலித்து, கர்த்தர் யார் என்று சொல்லாதபடிக்கும்; தரித்திர ப்படுகிறதினால் திருடி, என் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதபடிக்கும், என் படியை எனக்கு அளந்து என்னைப் போஷித்தருளும். தங்கள் தகப்பனைச் சபித்தும், தங்கள் தாயை ஆசீர் வதியாமலும் இருக்கிற சந்ததியாருமுண்டு. தாங்கள் அழுக்கறக் கழுவப்படாமலிருந்தும், தங்கள் பார் வைக்குச் சுத்தமாகத் தோன்றுகிற சந்ததியாருமுண்டு. வேறொரு சந்ததியாருமுண்டு; அவர்கள் கண்கள் எத்தனை மேட்டிமையும் அவர்கள் இமைகள் எத்தனை நெறிப்புமானவைகள். தேசத்தில் சிறுமையானவர்க ளையும் மனுஷரில் எளிமையானவர்களையும் பட்சிப்பதற்குக் கடகங்களை யொத்த பற்களையும் கத்திகளையொத்த கடைவாய்ப்பற்களையுமுடைய சந்ததியாருமுண்டு.

நீதி 31:10-12, 28, 30

குணசாலியான ஸ்திரீயைக் கண்டு பிடிப்பவன் யார்? அவளுடைய விலை முத்துக்களைப்பார்க்கிலும் உயர்ந்தது. அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும்; அவன் சம்பத்துக் குறையாது. அவள் உயிரோடிருக்கிற நாளெல்லாம் அவனுக்குத் தீமையையல்ல, நன்மையையே செய்கிறாள். அவள் பிள்ளைகள் எழும்பி, அவளைப் பாக்கியவதி என்கிறார்கள்; அவள் புருஷனும் அவளைப் பார்த்து: சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண், கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்.

நன்றி கர்த்தாவே

திராணி